**O.S.No. 163/2020**

**DW 1:**ஆறுமுகம் தேதி 24.3.2026

பிவாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பு குறுக்கு விசாரணை

வாதி என் பெரியப்பா மகன் அண்ணன் உறவு முறை. என்னிடம் காண்பிக்கபடும் திருமண பத்திரிக்கை வாசாஆ 7 என் மகளுடைய திருமண பத்திரிக்கை. என் மகளின் திருமணம் 29.11.2017 ல் ஆனது. வாசாஆ 7 திருமண பத்திரிக்கை 15 நாட்களுக்கு முன்பாக வாதிக்கு அவருடைய வீட்டில் வைத்து முறையாக அழைத்தேன். என் மகளின் திருமணம் அவினாசியில் நடைபெற்றது. என் மகளின் திருமண நிச்சயதார்த்தம் முகூர்த்தம் ஆகியவற்றிற்கு வந்து இருந்தார். அப்போது சுமூகமாக தான் இருந்தோம். என் மகளின் திருமணத்திற்கு ரூ.25 லட்சம் செலவானது. அந்த சமயத்தில் ரூ.25 லட்சம் என் கையில் இருந்ததற்கான வங்கி கணக்கு போன்ற ஆவணங்கள் உள்ளதா என்றால் மனைவி பெயரில் உள்ள அக்கவுண்டில் இருந்து தொகை எடுத்து செலவு செய்தேன். என் மனைவியின் பேங்க் அக்கவுண்ட் ஸ்டேட்மென்ட்டை தாக்கல் தயாராக உள்ளேன். என் மனைவியின் அக்கவுண்டில் இருந்து ரூ.15 லட்சம் எடுத்தேன் சாட்சி பின்னிட்டு ரூ.20 லட்சம் என்று கூறினார். அந்த சமயத்தில் நான் செலவுக்கு பணம் போதவில்லை என்று கூறி வாதியிடம் கேட்டேனா என்றால் இல்லை. திருமண செலவுக்கு பணம் தேவைப்பட்டதால் நான் வாதியிடம் கடன் கேட்டேன் என்றும் அவர் வங்கி கணக்கில் இருந்து ரூ.15 லட்சம் எடுத்து எனக்கு கடனாக கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. நான் புரோ நோட்டில் கையெழுத்து மற்றும் கைரேகை இடவில்லை என்றும் மேற்படி தொகையை பெறவில்லை என்பதை நிரூபிக்க நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இனிமேல் எடுக்க போகிறேன். புரோ நோட்டில் உள்ள கையெழுத்து மற்றும் கைரேகை என்னுடையது என்றால் சரியல்ல. நான் வாதியிடம் பணம் பெற்று கொண்டு திருப்பி கொடுக்க கூடாது

என்ற எண்ணத்தில் பொய்யான எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. என் எதிர் வழக்குரையில் புரோ நோட்டில் உள்ள கையெழுத்து மற்றும் கைரேகை என்னுடையதல்ல என்று குறிப்பாக நான் மறுக்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய சொத்து எனக்கு தாத்தா வகையில் பூர்வீக சொத்து. என் தாத்தா உயிருடன் இருக்கும் போதே என் பெயரிலும் வாதி பெயரிலும் சரிபாதியாக தனிதனியாக எழுதி கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அன்றிலிருந்து நான் என்னுடைய பங்கையும் வாதி அவருடைய பங்கையும் அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். எனக்கு வாடகை ரூ.40 ஆயிரம் வருகிறது. அதற்கான ரசீது இல்லை. நான் பகுதியாக வாடகை பெறுவதால் அதற்கான ரசீது கொடுப்பதில்லை. எனக்கு ரூ.40 ஆயிரம் மாத வருமானம் வருவதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் மாதம் ரூ.3000 – 4000 க்குள் தான் வருகிறது என்றும் சொன்னால் சரியல்ல. என்னுடைய வருமானம் எனக்கு போதவில்லை என்பதால் தான் என் மகளின் திருணமத்திற்கு வாதியிடம் கடன் வாங்கினேன் என்றால் சரியல்ல. என் எதிர்வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் வாதி என்னிடம் வந்து வீட்டை மனையிடங்களாக பிரித்து விற்றால் அதிக லாபம் கிடைக்கும் என்று கூறி என்னிடம் கையெழுத்து கேட்டதாகவும் அதற்கு நான் மறுத்து விட்டதால் வாதிக்கு கோபம் வந்துவிட்டதாகவும் அதனால் இவ்வழக்கை தாக்கல் செய்துவிட்டதாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு 1 வருடத்திற்கு முன்பாகவே எனக்கும் வாதிக்கும் மன வருந்தம் இருந்ததாகவும் பேச்சு வார்த்தை இல்லை என்று என்னுடைய எதிர் வழக்குரையில் சொல்லியிருக்கிறேன் என்றால் இந்த வழக்கை தாக்கல் செய்யத பின்னிட்டு தான் பேச்சு வார்த்தை இல்லை. அதற்கு முன்பு வரை பேசிக்கொண்டிருந்தோம். என்னுடைய எதிர்வழக்குரை பாரா 6 ல் நான் சொல்லியிருக்கும் சங்கதிகள் சரிதான். நான் வாதியிடம் பணம் பெற்று கொண்டு அவரை ஏமாற்றும் எண்ணத்தில் பொய்யான எதிர்வாதம் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் பணம் இருந்தது என்பதை காட்ட ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான்

நான் வாதியிடம் கடன் வாங்கி என் மகளின் திருமணத்தை நடத்தி வைத்தேன் என்றால் சரியல்ல. என் தரப்பில் சாட்சியை விசாரிக்க போகிறேனா என்றால் இல்லை. வாதி கோரியவாறு தாவா தொகை செலுத்த நான் கடமைபட்டவர் என்றால் சரியல்ல. தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.